# உதயசூரியன்
UTHAYASURIYAN

வள்ளுவராண்டு 2011
புரட்டாதி 12
ஜுல்ஹ 17
ஞாயிறு (28-9- 1980)
கதிர் 1
ஒளி 1

தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

விலை ரூபா 1-00



UNIVERSITY OF SRI LANKA CAMPUS LIBRARY
RECEIVED
1980 -12- 1
PERIODICALS DIVISION


# தமிழீழம் பெற தலையும் தருவோம்! எந்த விலையும் தருவோம்!

## தலைவர் அமிர் முழக்கம்

**தமிழ் ஈழத்தின் விடுதலைப் போராட்டத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி என்றும் தலைமைதாங்கிநடத்தும். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்மக்களை முன் நின்று வழிநடத்தி - கட்டம் கட்டமாக தமிழ் ஈழ விடுதலை நோக்கிமுன்னேறிவரும இந்த முப்பத்தைந்து இலட்சம் தமிழ்பேசும்மக்களின் விடுதலை இயக்கம் - மூலையில் நின்று சிலர் போடும் முணுமுணுப்புக்களால் அழிந்து போகாது! தியாகத் தீயில் புடம்போட்டு எடுக்கப்பட்ட தொண்டர்களால் - அவர்களின் இரத்தத்தால் - கண்ணீரால் உருவாக்கப்பட்ட இயக்கம் இதுவாகும்.**

இவ்வியப் பற்றினுல் தங்கள் சொந்த வாழ்வின் சுகபோகங்களை இழந்து போனவர்கள் இங்கேஇருக்கிறார்கள்-எல்லாவற்றுக்கும் மேலாக தந்தை செல்வாவின் புனித ஆத்மா நம்கூடவே இருந்து நம் எல்லோரையும் இயக்கிக்கொண்டிருக்கிறது. நாங்கள் தமிழர் விடுதலைப் போராட்டத்தை தீவிரமாக முன்னெடுத்துச் செல்வோர்! களங்களை உரிய நேரத்தில் நாங்கள் கட்டாயம் உருவாக்குவோம்! தமிழ் ஈழம் பெற தலையும் தருவோம்!எந்த விலையும் தருவோம்!

தமிழர் தலைவர் அமிர் அவர்கள் புத்தூரில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கம் நினைவு விழாவின்போது நிகழ்த்திய தழல் தோய்ந்த சொற்பொழிவில் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் சொன்னார்:—

''தமிழ் ஈழ விடுதலையை நாம் அடைந்தே தீருவோம் என்றுநாம்கொண்டுள்ள உறுதி இருக்கிறதே—அதுதான் நமது முதற் பலம். இந்த உறுதியை ஏற்றுள்ளமுப்பத்தைந்து இலட்சம் தமிழ் பேசும் மக்களும் ஒற்றுமையாய்— தமிழர் விடுதலை கூட்டணி என்ற ஒரே இயக்கத்தின் கீழ் இருக்கிறோமே— அதுதான் நமது இரண்டாவது பலம். இந்த இரண்டு பலத்திலும்தான் தமிழ்ஈழத்தின் விடுதலைதங்கியிருக்கிறதுஎன்பதை ஒவ்வொரு நிமிடமும் உங்கள் நினைவில் இருத்திக் கொள்ளுங்கள்.''

## அமரர் செல்வா ஆசி!

### வரவேற்கிறேன்; வாழ்க!


''உலகத்தில் உள்ள அரசியற் கட்சிகள் அனைத்தும் தம்கொள்கைகளைப்பரப்பத் தத்தமக்கெனக் கட்சி ஏடுகளை வெளியிடுகின்றன.

இந்த அடிப்படையிலே எமது கட்சியின் கொள்கைகளைத் தமிழ் மக்கள் உணர்ந்து செயலாற்றும்முறையில் எங்கள் கட்சி ஒரு ஏடு வெளியிடத் தீர்மானித்தது வரவேற்கத் தக்கதே.

இவ்வேட்டை வெளியீடும் பொறுப்பேற்ற குழு கட்சிக் கொள்கைகளை விளக்குவதோடு, கட்சியின்செய்திகளையும் செயல் திட்டங்களையும் காலத்துக்குக்காலம் வெளியிட்டுத் தமிழ் மக்களை அரசியல் உணர்வோடும் விழிப்போடும் இருக்கச்செய்வது மிக அவசியம்''

—தந்தை செல்வா

(முன்பு நம் இயக்கத்துக்கென ஓர் தனி ஏடுதொடங்கும்முயற்சிமேற்கொள்ளப்பட்டபோது தந்தைசெல்வா தந்த அன்பு வாழ்த்து)





### விடுதலைக் குரலே வெளிவா!

இருளைக் களைந்து எறிந்திட இளம்பரிதி தோன்றுவது தவிர்க்க முடியாத நியதியாகும். இன்று தமிழர் விடுதலைக் கூட்டணி உத்தியோக பூர்வமாக ''உதயசூரியன்'' என்ற பத்திரிகையை வெளியிடுவது மிகவும் தேவையான ஒன்றாகும்.

உலகில் தமது தனித்துவத்தைப் பேணிட— விடுதலை பெற்றிட—போராடும் தேசிய இனங்கள் தமது குரலாகச் செய்தித் தாள்களை நடத்துவதைக் காண்கின்றோம். நமது அண்டை நாடான தமிழ்நாட்டிலும், திராவிடமுன்னேற்றக் கழகம் போன்ற இயக்கங்களின் குரலாகப் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. இயக்க ரீதியாக 'நம் நாடு' என்ற பெயரில் ஒரு பத்திரிகையை தி.மு.க. வெளியிடுகின்றது.

இன்று ''உதய சூரியன்'' என்ற பெயரில் எங்கள் இயக்கம்பத்திரிகை வெளியிடுவது

(8-ஆம் பக்கம் பார்க்க)

### பகலவன் வந்தான் பனித்திரை அகன்றது!

தமிழ் மக்களின் அரசியல் சிந்தனையில் சமீப காலமாக ஓர் பனிப்படலம் படரவிடப்பட்டிருக்கிறது. மக்களின் சிந்தனையில்தெளிவை ஏற்படுத்த வேண்டியவர்களேநச்சுப் புகையைக்கக்கிக் குழப்பத்தை ஏற்படுத்தத் தொடங்கினர். மிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுக்கோப்பைச் சிதைக்கக் காத்திருந்தசக்திகள் குழம்பிய குட்டையில்மீன் பிடிக்க முற்பட்டன. மேலும் தடுமாற்றத்தைஏற்படுத்தும்வகையில் பல ஏடுகள்முனைந்தன. கருத்தரங்குகளும் பட்டிமன்றங்களும் ஆய்வரங்குகளும் உருவாகாத சட்டத்தை வியாக்கியானம் செய்து எஞ்சந்ததியைத் திசைதிருப்ப ஆரம்பித்தன, இவைஎல்லாவற்றினுலும் மக்களின் சிந்தனையில் படர்ந்த பனிப்படலத்திற்கு ஊடாக அறிவுக்கதிர்கள்செல்ல முடியாத அளவுக்கு திரையை தடிப்பாக அமைக்கச் சிலர் முயற்சி

(8-ஆம் பக்கம் பார்க்க)



## அமிர் - சிவா வாழ்த்து!

# தமிழ் ஈழம் தமிழர் தாகம்

# பறவைகளே! பறவைகளே!



பறவைகளே! பறவைகளே!

உங்கள் கூடவே பறந்துவரும் உங்கள் நண்பன் நான் உங்களுக்கில்லாத குரல்வளம் ஒன்றை இறைவன் தந்துவிட்டதால் உரத்த குரலில் பாடிக்கொண்டே உங்கள் பக்கத்தில் பறக்கிறேன்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் இருபத்தைந்து ஆண்டுகளாக இந்தப்பறவை தணியாமல் தன்இறக்கைகளைஅசைத்துக்கொண்டிருக்கிறது.

என்னை நீங்கள் நன்றாக அறிவீர்கள்— செல்வாக்கிழவன் நம் இயக்கத்துக்குஒளியூட்டி நின்ற காலம் தொடக்கம் அமிர் அண்ணன் நம் இயக்கத்துக்கு வழிகாட்டி நிற்கும் இந்நாள்வரை என்னை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

மனதில் பட்டதை ஒளிக்காமல் பேசும் காரணத்தால் பலமுறை மதிப்புக்குறைந்துபோன பறவை இது.

தன்னுடைய இரத்தத்தாலும் கண்ணீராலும் தமிழ் ஈழத்தைக் குளிப்பாட்டியவன் இவன் என்று தெரிந்த பின்பும்— உலகம் சிலவேளைகளில் இந்தப்பறவையை தவறாக எடைபோட்டுக் கூத்தாடியிருக்கிறது.

நெருங்கிய நண்பர்களாலேயே பல முறை என்னைநேராக அடையாளம் காணமுடியவில்லை.

நான் சிறைச்சாலையின் உள்ளே இருந்த போது எனக்காகக் கண்ணீர் விட்டவர்களே—வெளியே வந்த பின்புநான் பலமுறை கண்ணீர் விடக் காரணமாய் இருந்திருக்கிறார்கள்.

மாலை போட்டவனே பலதடவை என் காலை வாரிவிட்டிருக்கிறான்.

பறவைகளே! பறவைகளே!

சரி என்று மனதில் பட்டதை ஒளிக்காமல் வெளியே சொல்வது சரி என்றே இந்தப் பறவை கருதுகிறது— அதன் விளைவு எதுவானாலும் சரி அதை ஏற்றுக் கொள்ள இந்தப் பறவை எப்போதும் தயாராகவே இருக்கிறது.

ஒரு நாள் இந்தப் பறவையின் வார்த்தைகள் ஒப்புக் கொள்ளப்படும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மட்டக்களப்பில் ஒருவரைப்பற்றி நான் சொன்ன கருத்துக்கு முகம்சுழித்த சிலர் என்னைத் திட்டித் தொலைத்ததையும் நான்அறிவேன்— அதே ஜீவராசிகள் ஓராண்டு கழித்து நான் சொன்னஅதே கருத்து முற்றிலும் சரி என்று முதுகில் தட்டிக் கொடுத்ததையும் நான் அறிவேன்!

பறவைகளே! பறவைகளே!

இப்போது புதிய சர்ச்சை ஒன்று துவக்கப்பட்டிருக்கிறது.

தீவிரவாதிகள் பக்கமா நான் மிதவாதிகள் பக்கமா என்று ஒரு தீவிர ஆராய்ச்சியை சிலர் தீவிரமாகவே முடுக்கிவிட்டிருக்கிறார்கள்,

மிதவாதிகள் பக்கம்தான்நான் என்று என்னைஒதுக்கிநள்ளும் மிகத்தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பரிதாபப்படுகிறேன்உண்மையின்பக்கம்தான்நான் என்பதை அறியாத இவர்களுக்காக நான் உண்மையிலேயே பரிதாபப்படுகிறேன்.

உலகின் எல்லா விடுதலை இயக்கங்களிலும் மிதவாதிகளும் இருந்திருக்கிறார்கள்— தீவிரவாதிகளும் இருந்திருக்கிறார்கள்.

இலட்சியப்பற்றிலும் தியாக வாழ்விலும் ஊறிய மிதவாதிகளுக்கு மதிப்பளிப்பவனும்— நிதானம் தவறாத நேர்மை தவறாத தீவிரவாதிகளுக்கு தலைவணங்குகிறவனுமேஒரு விடுதலை இயக்கத்துக்கு பலமாய் இருப்பான்.

கொள்கைப் பற்றே இல்லாமல் சுயநலத்தோடு 'குளு குளு' என்று வாழும் மிதவாதியையும் நிதானம் இல்லாமல் மலையோடு முட்டித் தலையை உடைத்துக் கொள்ளும் தீவிரவாதியையும் குப்பைத் தொட்டியில் தள்ளவேண்டும் என்பதே என் கொள்கை.

ஆனால்... நான் முன்னே சொன்ன மிதவாதிகளையும் தீவிரவாதிகளையும் ஆசையோடு மெய்யாகவே நேசிக்கிறேன்.

பறவைகளே! பறவைகளே!

நான் எப்போதும் என் கருத்துக்களை நாப்பிறழாமல்உறுதியாகவே இசைக்கிறேன்.

இப்படியெல்லாம் நான் இருப்பதால்தான் சிலர் இவனை எப்படியெல்லாம் மடக்கலாம் என்று திட்டம் போடுகிறார்கள்.

ஒன்றை மட்டும் சொல்கிறேன்— கேளுங்கள்- நான் உண்மையோடு ஒட்டிக்கிடப்பதால் என்னை யாரும் ஒன்றுமே செய்ய முடியாது

மாவட்ட அபிவிருத்திச்சபை பற்றி முடிவு செய்ய வவுனியாவில் நமது பொதுச்சபை கூடியபோது- நான் அங்கே பேசிய உரையை திரித்து செய்தியாக்கி- எனக்கு மாசுகற்பிக்க முனைந்தவர்களை நினைத்துப் பார்க்கிறேன்.

தமிழர் விடுதலை கூட்டணி விடுதலை இயக்கமல்ல. அரசியல் இயக்கம்தான் என்று நான் பொதுச்சபையில் பேசியதாக தினபதி தனக்கே உரிய பாணியில் ஒரு பச்சைப் பொய்யைச் செய்தியாக்கியிருந்தது.

தினபதி தமிழர் விடு தலை இயக்கத்துக்கு அள்ளிவைப்பது நியதி என்பதால் இச்செய்தி படித்தும் நான் அசதி அடையவில்லை.

நாயின் மடியில் இருந்து பசுப்பாலை ஒரு போதும் நான் எதிர்பார்க்கமாட்டேன்.

சுதந்திரன் வெளியிட்ட செய்தி இன்னும்சுவையானது.

''போராட்டத்துக்கு இப்போது சூழ்நிலை சரியில்லை— எனவே மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்பதைத் தவிர வேறுவழியில்லை'' என்று பொதுச்சபையில் நான் பேசியதாக பொய்யிலும் அபாண்டமானபொய்ஒன்றைச்செய்தியாக்கிப் போட்டிருந்தது, சுதந்திரன்.

''அபிவிருத்தி சபைகளை ஆளப்போகிறது ஆண்டபரம்பரை!'' என்ற குத்தலான தலைப்பை இச்செய்திக்கு ஆசிரியர் சூட்டியிருந்தார்.

நண்பர் கோவை எனக்கு நண்பர்.

கோவைமகேசன் சுதந்திரனுக்காக உழைத்த காலத்தை விட கூடிய காலம் நான் சுதந்திரனுக்காக உழைத்திருக்கிறேன்.

''காசி! இப்படி ஒரு செய்தி எனக்குக் கிடைத்திருக்கிறது— இது மெய்தானா? என்று ஒரு கடிதம் எழுதிக் கேட்டுவிட்டு கோவை இச்செய்தியை சுதந்திரனில் 'காட்சி' ஆக்கியிருக்கலாம்.

கோவை என் நண்பர் என்பதால் நான் கோபிக்கமாட்டேன்—ஆனாலும் ஒன்று சொல்கிறேன்— போராட்டத்தைப் பற்றி யாரும் தயவு செய்து எனக்கு போதனை செய்ய வராதீர்கள்.

வாழ்க்கையே போராட்டமாகவும்— போராட்டமே வாழ்க்கையாகவும் கொண்ட எனக்கு யாரும் வாத்தியாராக வேண்டாம்.

மேசையில் உள்ள தொலைபேசிக்கும் மின்விசிறிக்கும் இடையில் உட்கார்ந்துபோராட்டம்நடத்துகிறவனல்லநான் மேடு பள்ளம் என்று கிடக்கும் தமிழ் ஈழத்தில் வெயில் மழை என்று அலைந்ததால்— நோயும் கண்ணீரும் என்று நொடிந்துபோன பறவை இது.

காயங்கள் சுமந்த ஒரு பறவையிடம் நியாயங் ள் பேச வராதீர்கள்.

பறவைகளே! பறவைகளே!

அவர்கள் ஒருபக்கம் இருக்கட்டும்— இனிநான் உங்களுக்கு அருகில் வருகிறேன்,

இந்தப்பாணியில் நான் இசைக்கும் முதல்பாடல் இது என்பதால் என்னைப்பற்றிக் கொஞ்சம் அதிகமாகவே நான் இசைக்க வேண்டியதாயிற்று.

பாடுகிற பறவையை நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டால்தான் பறவையின் பாடலில் ஓடுகிற உணர்வை நீங்கள் சரியாகப் புரிந்துகொள்ளலாம்.

பறவைகளே! பறவைகளே!

தமிழ் ஈழத்தின் மண்ணையும் கடலையும் வானத்தையும் அனுபவிக்க முடியாத தலைகுனிந்த பறவைகளாய் நாம் நிற்கிறோம்.

நாலு பக்கமும் விரிக்கப்பட்ட வலையின் நடுவே அடிமைகளாகிய நாம் இறக்கை விரிக்கிறோம்.

இந்த நேரம் உங்களுக்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம் இதுதான்—

ஒன்றாய்ப் பறப்போம்! ஒழுங்காய்ப் பறப்போம்!

அரும்பெரும் தலைவன்— அண்ணன் அமிர்— நம்முன்னே அதோ பறந்து செல்கிறார்.

வரிசை குலையாமல் அவர் பின்னே வாருங்கள்.



கவிஞர் காசி ஆனந்தன்

# ஒளியின் உதயம்

எமது இனத்தின் இன்றைய சூழ்நிலையில் எங்களுக்காக எமது உண்மைநிலையைத் தெளிவாக எடுத்துக் கூறும் பத்திரிகை ஒன்று எமக்குத் தேவை. சிலபத்திரிகைகளின் தவறான பிரசாரம் இங்குள்ள மக்களை மாத்திரமல்ல, வெளிநாடுகளில் உள்ள எமது ஆதரவாளர்களையும் உண்மை நிலை தெரியாத ஒரு குழப்பத்தில் தள்ளிவிட்டிருக்கின்றது. எனவே, ஒரு விடுதலை இயக்கம் இன்றையச் சூழ்நிலையில் மக்களுக்குத் தனது நிலையைத் தெளிவாக்கி தூய கருத்துக்களையும் உண்மை நிலைபபாட்டையும் செயல் திட்டங்களையும் எடுத்தியம்புவதற்கு ஒரு கருவி பத்திரிகை.

இன்று நமது தலைவர்களும் தொண்டர்களும் மேற்கொண்டுள்ள இப்பணிக்குப் பொது மக்களுடைய ஆதரவு தேவை.

ஒரு சொந்தப் பத்திரிகையில்லாத குறையைத் தீர்த்து வையுங்கள் என்றுபல இலட்சிய உள்ளங்கள்வேண்டுகோள் விடுக்கின்றன. இந்த வேண்டுகோள் நிறைவேறுவதில் பெருமகிழ்வு கொண்டிருக்கும் கூட்டணி மகளிர் பேரவையின் சார்பில் இன்றைய இருள் நீக்க எமக்குமுன்பு தோன்றி வரும் 'உதயசூரியனை' வாழ்த்தி வணங்குகிறோம்.

தமிழீழப் பெண்கள் இந்தப் பத்திரிகையைத் தங்கள் தாயகம் காக்கும் கருவியாக்கி, தமிழ் ஈழம் மலர உழைக்க வேண்டுகிறோம்.

விடுதலை வேட்கையை. எமது பணியை எங்கள் நெஞ்சங்களில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கச் செய்ய உதயசூரியன் வருகிறான்; வரவேற்கிறோம்.

மலர்க தமிழீழம்! வாழ்க வளர்க உதயசூரியன்!

இவ்வாறு மகளிர் பேரவைப் பொதுச் செயலாளர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள்உதயசூரியனுக்கு அளித்த வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# நிழல் தரும் மரம்



மரத்தை வெட்டுகின்றவன் கூட களைத்துப் போனால் ஓய்வு எடுப்பதற்கு இன்னொரு மரத்தின் நிழலில்தான் அமருகிறான். நம்மையும்இவன் வெட்டுவானே என்று நினையாமல் அந்த மரம் நிழல் தருகின்றது. அதுபோல அரசியலில் நம்மைத் தாக்குவோரிடத்திலும் நிழல் தரும் மரம் போல் அன்பு காட்ட வேண்டும்.

— அறிஞர் அண்ணா

(அறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் விழா 15-9. 1980ல் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் கொண்டாடப்பட்டது.

வன்னியர் வழங்கும் அறிவுரை

# கப்பல் கரைசேர வேண்டுமா?

இன்றையச் சூழ்நிலை, உப்புச் சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதற்கு மகாத்மா காந்தியும் இர்வின் பிரபும் செய்து கொண்ட போர் நிறுத்தத்தை ஞாபகமூட்டுகின்றது. பறிமுதலான நிலங்கள் பற்றிய ஒப்பந்தம் திருப்திகரமாக இல்லையென சர்தார்படேல் முணுமுணுத்தார். பூரண சுதந்திர அடிப்படையிலேயன்றி, வேறெந்த அடிப்படையிலும் பேச்சுவார்த்தை நடத்த முடியாதென்பதை வலியுறுத்தவில்லையென ஜவஹர்லால் நேரு முழங்கினர். அரசியல் கைதிகள் விடுதலை பற்றி ஒப்பந்தம் தாராளமாயில்லையென விளாசினர் பலர்.

இதற்கு காந்தியடிகள்— 'கைதிகள் விஷயத்திற்காக ஒப்பந்தம் செய்யாது விடுவதா? நிலங்கள் விஷயத்தில் கோபித்து முறித்துக் கொள்வதா? அல்லது வேறு எதற்கு ஒப்பந்தம்? என்று கேட்டார்.

ஒப்பந்தம் அவ்வளவு திருப்திகரமாக இல்லாத போதிலும் காங்கிரஸ் அவ்வித ஒப்பந்தத்தை ஏற்கத்தான் செய்தது. அதேசூழ்நிலையில்தான் நாமும் இருக்கிறேம் என்பது வெளிப்படை!

## கொள்கையை விடவில்லை

இந்த உடன்பாட்டினைச் சிறிது ஆராய்வோம். மொழி விஷயத்திலென்றுலென்ன, சமஸ்டிக் கோரிக்கையிலென்றுலென்னகுடியுரிமைப்பிரச்சினையிலென்றுல் என்ன, நாம் எவ்வித மேனும் எங்கள்கொள்கையைச் சிறிதளவும் விட்டுக்கொடுக்கவில்லை என்பது தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது............ எங்கள் கொள்கைகள், கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தொடர்ந்து கிளர்ச்சி செய்யவோ அல்லது உரியபிறிதொருகாலத்தில் ஒரு போராட்டத்தை ஆரம்பிக்கும் உரிமையையோ, நாம் இழந்துவிடவில்லை. இன்றைய ஆட்சியாளர்தானும் இதனை ஒரு நிரந்தரமான சமரச முடிவாகக் கருதவில்லை. ஏனெனில் இந்த உடன்பாடு தமிழ் பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள ஜாதிய, கலாசார, அரசியல், பொருளாதாரத் தகராறுகள் அனைத்திற்கும் முடிவுகாணவில்லை என்பது வெளிப்படை!

## மகாத்மா சொன்னர்

மகாத்மா காந்தி அடிகள் தான் இர்வின் பிரபுவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் பற்றித் தெளிவுபடுத்திக் கூறும் பொழுது—

"They ought to understand that we have entered into no peace treaty. It is a provisional temporary settlement we have arrived at. I beseech you not to bid good bye to common sense to cool courage, to patience and to reason" என்று கூறியதை அவதானிக்கும்படி கேட்டு, அதனையே நானும் இப்பொழுது உங்களுக்குக் கூறுகின்றேன்.

எங்கள் பகுத்தறிவையோ. அமைதியான தைரியத்தையோ, எதனையும் நுணுகி ஆராயும் அறிவையோ நாம் இழந்துவிடக்கூடாது.

## தாகம் தணியாது

இன்று சத்தியாக்கிரகம் நிறுத்தப்படுவதால் போராட்ட மனப்பான்மை நிரந்தரமாகவே போய்விடும் என்று அஞ்சுகிறுர்கள்சிலர். ஆனல்—

பாரத நாட்டின் சுதந்திரப் போரின் சரித்திரத்தை, உற்று நோக்கினல் எத்தனையோமுறை போராட்டம் நிறுத்தித் திரும்பவும் ஆரம்பிக்ககப்பட்டது என்பதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக் கூடிய பாடம் ஒன்றுண்டு. சுதந்திர வாஞ்சையுள்ள மக்களின் தாகம்— சுதந்திரத்தின் மூலம்தான் தணியுமேயன்றி வேறெதனலும் தணியாது. மீண்டும் போராட்டம் ஆரம்பிக்க நேரிட்டால் அதற்கு ஆதரவு தமிழ் பேசும் மக்களிடமிருந்து கிடைக்கவே செய்யும் என்பது என் திடமான நம்பிக்கை இதனையே காந்தியடிகள்—

If therefore we are conscious to our strength and our ability to resume civil disobedience, whenever it becomes necessary we shall find no difficulty என்று கூறியுள்ளார். அந்தவித ஆற்றல் நமக்கு இல்லாது போனல் சுதந்திரத்துக்கு நாம் அருகதையற்றவர்களாவோம். ஆகவே சத்தியாக்கிரகம்நிறுத்தப்படுவதால் ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை; போகவும் முடியாது என்று வற்புறுத்துகின்றேன்.

## ஒற்றுமை ஒரு சமுதாயத்தின் உயிர்நாடி

தமிழ் பேசும் மக்களிடையே ஒற்றுமையில்லை யென்று பலரும் கூறுவதை நான் அடிக்கடி கேட்டிருக்கின்றேன். தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டால்தான் அவர்களுக்கு விமோசனம் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. ஓர் இலட்சியத்தை நாம் அடைய வேண்டுமென்னும் குறிக்கோளை வைத்தே இவ்வொற்றுமை ஏற்பட வேண்டும்.

## கட்டுப்பாடு தேவை!

பலர் ஒரு கப்பலில் ஏறிக் கொள்ளலாம்: எல்லோரும் கப்பலில் இருக்கிறுர்கள் என்ற அளவில் ஒருவித ஒற்றுமை இருக்கிறதென்றுகூறமுடியுமா? கப்பலில் இருக்கும் மக்கள் கப்பலை வெவ்வேறு திக்குகளில் ஓட்டமுயற்சிக்க— வேறு சிலர் கப்பலில் துவாரங்கள் . செய்ய ஆரம்பித்தால்......... கப்பலின் கதி என்னுகும்? எல்லோரும் ஒருதுறைமுகத்தை நோக்கிக் கப்பலை ஓட்டுவதென்றும் அது வரை கப்பலுக்கு வரும் இடையூறுகளிலிருந்து கப்பலைக் காப்பாற்றுவதென்றும் திடவுறுதியுடன் உழைத்தால் கப்பல் சுகமாகத்துறைமுகம் சேரும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்னும் கப்பலில் ஏறிய சில'ர், கப்பல் தலைவனின் கட்டளைக்குக் கட்டுப்பட மறுத்து, தாமும் தலைவர்களாகும் நோக்கோடு, கப்பலில் துவாரங்கள் செய்தும்— வெவ்வேறு திக்குகளில் அதனை ஓட்டிடமுயல்வதையும் த.வி.கூ. செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் சுட்டிக்காட்டியபோது, கேலியும் கிண்டலும் புரிந்தோர்க்கு— மட்டக்களப்பில் நடந்த தமிழரசுக்கட்சியின் 5வது தேசிய மாநாட்டிற்குத் தலைமையேற்று அமரர். கு. வன்னியசிங்கம் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து சில கருத்துக்களைக் காணிக்கையாக்குகின்றேம்.
—ஆர்

## கிழக்கு வழி காட்டுகின்றது

நமது விடுதலைப் போரில் வெற்றி காண்பதற்கு நமது சமூகத்தில் காணப்படும் தீண்டாமையென்னும் தீய வழக்கம் ஒழிய வேண்டும். நம்முள் ஒரு சாராரைத் தீண்டாதார் என இழிநிலையில் வைத்துக் கொண்டு, சிங்கள சகோதரர் நம்மையும் நமது மொழியையும் இழிவுபடுத்துகிறுர்கள் என்று கூறுவது எவ்வளவு அர்த்தமற்றதென்பது விஷயத்தைச் சிறிதளவேனும் சிந்தித்துப் பார்ப்போருக்கு புலனுகும். ஹரிசனர் உட்சென்று வணங்கக் கூடியதாக - முயற்சி செய்து பல ஆலயங்களையும் திறப்பித்து வைத்த பெரியார் அனைவர்க்கும், இவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி கோவில்களைத் திறந்துவிட்ட தர்மகர்த்தாக்களுக்கும் தமிழ் பேசும் இனத்தின் நன்றியுரித்தாகும். இவ்விஷயத்தில் கிழக்கு மாகாணம் வழிகாட்டியாக நிற்பது பற்றி மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

## எங்கள் கடமை எது?

சமரசமானபேச்சுவார்த்தைகள் மூலம் எங்கள் கோரிக்கைகள் வெற்றி பெறும் வகையில் முயற்சிப்பதே எங்கள் கடமை அவ்வித முயற்சி தோல்வியுற்றுல் எதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். எதற்கும் தயாராக இருக்கும் மனே நிலையை எம்முள் அமைக்க வேண்டுமென்பதையே இங்கு குறிப்பிடுகின்றேன்.

# முன்னேர் பணியை மூடி மறைக்கவோ?



இந்த மாநிலம் மாற்றுரும் பாராட்டுகிறமாநிலமாக மாறிட வேண்டும். பல பெரியார்கள் அதற்காகப் பாடுபட்டு மறைந்துவிட்டார்கள். அவர்கள் மறைந்துவிட்ட இடங்கள் இருக்கின்றன. அவர்கள் மறைந்துவிட்ட இடங்களெல்லாம் நாம் கால் வைத்து ஏறுவதற்குரிய இடங்களாக அமைத்துவிட்டு— படிக்கற்களாக அமைத்து விட்டு அவர்கள் மறைந்திருக்கிறுர்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானல் தென்னை சிறு கன்றில் இருந்துவளர்ந்துஅதுதருகின்ற ஒவ்வொரு மட்டையையும் மக்களுக்கென்று பயன் படுத்துகின்றது. தென்னை மரமாக ஆன பிறகு பார்த்தால் அங்கே தெரிகின்ற வடுக்களெல்லாம் என்ன?

ஒவ்வொரு மட்டையும் இருந்த இடம் ஒவ்வொரு மட்டையும் மக்களுக்குத் தந்து விட்டு வடுகளை மாத்திரம் மிச்சமாக வைத்திருக்கிறது.

அந்த வடுக்களையும் மக்கள் பயன்படுத்தாமல் விடுகிறுர்களா? மனிதன் பயன்படுத்தாமல் விடுகின்றுனு? மக்களுக்காகப்பாடுபட்டு அதனுல் ஏற்பட்ட அந்த வடுக்கள் இருக்கிறதே, அந்த வடுவின்மீது கால் வைத்து ஏறித்தான் தென்னை மரத்தில் இருக்கிற இளநீரையோ— தேங்காயையோ இன்றைக்கு மனிதன் பயன்படுத்திக் கொள்ள முனைகிறுன்.

எனவே— பெரியவர்கள்— அறிஞர்கள்— சான்றேர்கள்— புலவர் பெருமக்கள் வரலாற்றுப் பேராசிரியர்கள்— வீரர்கள்— தியாகிகள்— இவர்களெல்லாம் கடந்த காலத்தில் இருந்து மறைந்தாலும்— எதிர்காலத்தில் உள்ளவர்கள் ஏறிச்செல்லத்தக்க தென்னை மரத்தினுடைய வடுக்களாகத் தம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டு போயிருக்கிறுர்கள்.

— கலைஞர் மு. கருணுநிதி

'உதய சூரியன்'

வாசக உள்ளங்களே!

உங்கள் எண்ணங்களை

நாங்கள்

அறிய வேண்டாமா?

எழுதுங்களேன் ...!

# ஏன் இந்த ஏடு?

கொதித்து எழும் விடுதலை நெஞ்சங்கள் மகிழ இதோ— உதயசூரியன் உதித்து எழுகிறான்!

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு என ஒரு சொந்த ஏடு! அதைத்தணியாத ஆவலோடு படித்து மகிழ்கிறது தமிழீழ நாடு!

நமது கொள்கையைப் பரப்ப — செயற்பாடுகளை விளக்க—இயக்கத் தோழர்களை எழுத்தால் தொடர்பு கொள்ள உலகளாவிய தமிழர் எம்மைப் புரிந்திட— எதிரிகள் அஞ்ச— இயக்கம் பலப்பட— இதோ ஒரு கருவி கிடைத்திருக்கிறது.

சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஊதுகுழல்களாய் நின்று கொட்டமிடும் தேசிய நாளேடுகளை அங்குலம் அங்குலமாய் நொறுக்க இனி நம்மிடமும் ஆயுதம் உண்டு.

பச்சைப் பொய்களை அள்ளிக்கொட்டியும்— உண்மைச் செய்திகளை திரித்துக்கட்டியும்— எச்சில் தமிழால் எமது இயக்கத்தை— தலைவர்களை இழிவாய்த் திட்டியும் வரும் படுபாவ ஏடுகளுக்கு இனி பலமான அடிவிழும்!

தமிழ் ஈழத்தின் ஒற்றுமையைச் சிதைக்க முயல்பவர்கள் உதயசூரியனின் தழலால் பொசுக்கப்படுவார்கள்.

இணை இலா இயக்கம் ஒன்றின் துணை என இப்பத்திரிகைதோன்றுகிறது.

தமிழ்ஈழ விடுதலை உணர்ச்சி விருட்சம் ஓங்கிவளர இந்த ஏடு தண்ணீர் வார்க்கும்!

விழிகள் சிவக்க 'களம் எங்கே?' என்று எழும் இளைஞனுக்கு வழிகள் காட்டிவைக்கவே 'உதய சூரியன்' வருகிறான்.

அறிவையும் உணர்ச்சியோடு சேர்த்து விடுதலை வீரர்களுக்கு ஊட்டவேண்டும் என்பதே எமது அவா.

ஒரு தலைவனின் பின்னால் அடி பிசகாமல் தொண்டர்கள் நடக்க வேண்டும் என்னும் பாடம் இந்த ஏட்டில் ஓதப்படும்.

முதலாளித்துவத்துக்கு இந்த ஏடு ஒரு போதும் முதுகு தடவாது,

ஏழைகளின் பக்கமே நாங்கள் என்றும் நிற்போம்!

அடிமைப்பட்டுக்கிடக்கும் தமிழீழத்தின் விடுதலைக்காக மட்டுமல்ல—உலகில் அடிமைப்பட்டுக்கிடக்கும் அத்தனை மனிதர்களின் விடுதலைக்காகவும் 'உதய சூரியன்' தன்னை அர்ப்பணிப்பான்.

உலகத்தின் அத்தனை பாவங்களுக்கும் முதல் உதை இங்கே விழும்!

அநீதியை ஜீரணிக்கின்ற பேனாவை அந்தக்கணமே நாங்கள் உடைத்தெறிவோம்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏடு என்பதொன்றே இந்த ஏட்டுக்குப் போதுமான தகுதியாகும்.

சுதந்திர சோசலிச தமிழ் ஈழத்தை நிறுவும் பணியை இந்த ஏடு சுமந்து நிற்கிறது.

வாசகர்களாகிய உங்களுக்கு நாங்கள் சொல்லிக்கொள்வதெல்லாம் இதுதான்—

தமிழ்ஈழ விடுதலை வரலாற்றில் இந்த ஏடு ஒரு தனி இடத்தைப் பெறுகிறது என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள்!

வீடு தவறாமல் இந்த ஏடு பரவவேண்டும்,

உங்கள் கையில்தான் இனி எங்கள் பத்திரிகை!

ஆசிரியர் பேசுகிறார்

அபிவிருத்திச் சபைகள்

# நாட்டைப் பிரிக்கும் நாச சக்தி

## சுதந்திரக் கட்சி சொல்கிறது

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட அபிவிருத்திச்சபை மசோதா குறித்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் துணைத் தலைவர் திரு, மைத்திரிபால சேனநாயக்கா பாராளுமன்றத்தில் வாசித்த அறிக்கையிலிருந்து சிந்திய 'கருத்து மணிகள்' இவை! படியுங்கள்! —ஆர்

இங்கேஅறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இம்(அபிவிருத்திச்சபை) மசோதா நாட்டைப் பிரிப்பதற்கான நடவடிக்கையாகும்.

குடியேற்றம்— கலாசாரம் கல்வி— இவை சம்பந்தமாக 1956லும் 1968லும் உருவாக்குவதற்கெண்ணிய சபைகளை விட, இந்தமசோதாவில்அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இம்மசோதாவை ஆய்ந்த போது இதில் உள்ள பெரும்பாலான கருத்துக்களும் தீர்மானங்களும் கலாநிதி நீலன் திருச்செல்வத்தினுடைய அறிக்கையில் உள்ளனவாகப் புலப்படுகின்றன.

ஆணைக்குழுவில் பத்துப்பேர் அங்கம் வகித்தாலும், இறுதியில் தனிப்பட்ட ஒருவரான கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் கருத்துக்களையே பெரும்பாலும் (இம்மசோதா) அடிப்படையாக்க் கொண்டுள்ளது.

ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினரின் கருத்துக்கள் பொருட்படுத்தப்படவில்லையென்பது தெளிவாகின்றது.

மசோதா பொதுமக்களின் அனுமதியை பொதுவாக்கெடுப்பின்மூலம் பெறுவது முக்கியம் என்று உயர் நீதிமன்றம் தனது கருத்தைத் தெரிவித்துள்ளது.

இந்த மசோதாவின் ஒவ்வொருபகுதியும் இன்றையத் தலைமுறைக்கு மட்டுமன்றி,

எதிர்காலத் தலைமுறைக்கும் ஆபத்தையும் பொறிக்கிடங்குகளையும் நிறைய உடையதாக இருக்கின்றது என்பது எங்கள் கருத்து.

காலம்சென்ற எஸ். டபிள்யூ ஆர். டி, பண்டார நாயகாவால் 1957ல் உருவாக்கப்பட்ட பிரதேசசபை மசோதா அல்லது டட்லி சேன நாயக்காவின் கூட்டுஅரசாங்கத்தால்1968ல் கொண்டுவரப்பட்ட மாவட்ட சபை மசோதா— இந்த மசோதாவில் உள்ள விரிவான விடயங்களையும் பரந்த அதிகாரங்களையும் பெற்றிருக்கவில்லை.

இம்மசோதாவின் 26ம் பிரிவின்படி அபிவிருத்திச் சபைகளுக்கு— பிறநாடுகளிலிருந்தும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் எல்லையற்ற கடன் பெறுவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தமசோதாவின் அதே பிரிவு நாட்டின் பொருளாதாரச் சுதந்திரத்தையும், இறைமையையும் பயமுறுத்தக்கூடிய சக்திகளுக்கு இடமளிக்கின்றது.

மசோதாவின் 26வது பிரிவு அபிவிருத்திச் சபைகளை- அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அப்பாலும்தமது செயற்பாடுகளை விரிவாக்க அனுமதிப்பதால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

16 (உ) பிரிவுடன் 26ம் பிரிவும் சேர்ந்து அபிவிருத்திச் சபைகள் அந்நியசக்திகளோடு நேரடித் தொடர்பு கொள்ள உதவுகின்றன,

# தெய்வத்திலும் பெரியவரா தேவநாயகம்?

தேனுடாம்மட்டக் களப்பில் முருகன் குடிகொண்ட தெய்வத்திருத்தலம் சிற்றாண்டிக்குடி. வேல்வழிபாடு நிகழும் இத்தலம் அமைந்த கிராமம் முருகனின் பெயரால் சிற்றாண்டிக்குடி என்று காலம் காலமாக அழைக்கப்பட்டு வருகிறது.

அழகான முன்வாயில் கோபுரம்— திரளான பக்தர்கள்கூட்டம் குறையாத சிற்றாண்டிக்குடி முருகன் கோயில் அற்புதங்களுக்கும் இறைவன் அருளுக்கும் பேர்போன அரும்பெரும் தலமாகும்,

இக்கிராமத்தில் உள்ள புகையிரத நிலையம் "சிற்றாண்டிக்குடி" என்ற பெயராலேயே நேற்றுவரை அழைக்கப்பட்டு வந்தது.

'சிற்றாண்டிக்குடி' என்னும் புகையிரத நிலைய பெயர்ப்பலகையைகாணும்போதெல்லாம் புகைவண்டியில் செல்லும்மக்கள் அந்த முருகனை நினைத்து தலையில் ஒருமுறை குட்டிக் கொள்வார்கள்,

இப்போது "தேவபுரம்" என்ற புதிய பெயர் சிற்றாண்டிக்குடி புகையிரத நிலைய பெயர்ப்பலகையில் காட்சி தருகிறது.

தன்னுடைய பெயர் விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்று அமைச்சருக்கு ஆசை இருந்தால் முருகனுக்கு அள்ளி வைத்துத்தான்ஆசையைநிறைவேற்றவேண்டுமா அமைச்சர்?

'சிற்றாண்டிக்குடி' பெயர்ப்பலகை புகையிரத நிலையத்தில் உடைத்து சிதைக்கப்பட்டு— 'தேவபுரம்' சீரும் சிறப்போடும் திகழ்வதை இப்போது காணலாம் "அட சிற்றாண்டிக்கந்தா! நீ அமைச்சர் உதைத்து விளையாடும் பந்தா? என்று அழத்தோன்றுகிறது இல்லையா?

# வள்ளுவன் உள்ளம் வானளாவியது!


## வேலணை திருக்குறள் விழாவில் தமிழ்த்திரு தனிநாயகம் அடிகளார்!

தமிழ்மலை எனத் தரணிபோற்றும் தனிநாயகம் அடிகளார் கடைசியாகக்கலந்து கொண்ட நிகழ்ச்சி வேலணையில் வைகாசி (மே)த் திங்களில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் இடம் பெற்றது.

தமிழ் மறைக்கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் எழுதிய 'தமிழ் மறை விருந்து' எனும் நூலை வெளியிட்டு அடிகளார்நிகழ்த்திய ஆராய்ச்சிப் பேருரையின் பெரும்பகுதியை இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனம் இரண்டு முறை ஒலிபரப்பியது.

தமிழ் ஏடுகளிலே வீரகேசரி வெளியிட்ட உரைப்பகுதிகளை அடிகளாரின் நினைவுக் காணிக்கையாக இங்கே தருகிறோம்

—ஆர்



விழாவின்போது 'தமிழ் மறைவிருந்து' எனும் நூலை அடிகளார், திரு. பே. சிவசுப்பிரமணியம் அவர்களிடம் வழங்கும் காட்சி. அடிகளாரின் இறுதி நிழற்படமும் இதுவாகும்.

பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் போன்றவர்களை உலக அறிஞர் வரிசையில் வைத்து நாம் போற்றினாலும்சிலஇடங்களில் அவர்களிடமும் குறுகிய மனப்பான்மை பளிச்சிடத்தான் செய்கிறது. ஆனால் திருவள்ளுவர் இவர்களைவிடமாறுபட்டு பரந்த மனப்பான்மையுடன் காணப்படுகிறார். அவர் எந்த இடத்திலும் தமிழ், தமிழன் என்று சொல்லவில்லை எனப்பேராசிரியர் கலாநிதி அருட்திரு தனிநாயகம் அடிகளார் குறிப்பிட்டார்.

வேலணையில் நடைபெறும் தமிழ் மறைக்கழகத்தின் திருக்குறள் மகாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சியின்போது பண்டிதர் கா.பொ. இரத்தினம் எழுதிய 'தமிழ்மறைவிருந்து' என்ற நூலைவெளியிட்டு வைத்துப் பேசுகையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அடிகளார் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

குறள் ஒழுக்கநூல். தமிழன் ஒழுக்கம் அதில் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றது. ஆனால் அந்த நூலில் தமிழ் நாடு என்று எந்தஇடத்திலும் சொல்லவில்லை. வான் புகழ் கொண்ட உலகப்பொது நூல் அதுவாகும்.

திரு. இரத்தினம் திருக்குறள்சிறப்பைப்பரப்பும்முயற்சியில் எத்தனையோ ஆண்டுகளாக ஈடுபட்டிருக்கின்றார். அவருக்கு நாம் நன்றி கூற வேண்டும். அவர்போல் மற்றெந்த தனிமனிதனும் திருக்குறளுக்கு இப்படி பணிபுரிவதை நாம் அறியவில்லை.

### சேதுப் பிள்ளையின் தரத்தில்

என் கண்பார்வை குறைந்து விட்டது. அடுத்த திங்கட்கிழமை சத்திர சிகிச்சை நடக்க இருக்கிறது. ஆயினும்திரு. இரத்தினத்தின் தமிழ் மறை விருந்து ஆய்வு நூலை படித்தேன். ரா, பி. சேதுப்பிள்ளை எழுதிய ஆய்வு நூலின் தரத்தில் அது அமைந்துள்ளது.

நம் நாட்டுக்கு வந்த வெளிநாட்டான் குறளையே முதல் படித்திருக்க வேண்டும். தம் வாழ்வில் இல்லாத ஒழுக்க நெறிகளையெல்லாம் அதில் கண்டுமற்றவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். குறளின் சிறப்பு அக்காலத்திலேயே மேல் நாட்டாருக்குப் புலப்பட்டது.

குறளை நம் மக்கள் இப்போது அதிகம் படிப்பதில்லை. அதை அவசியம் படித்துபின் பற்றவேண்டும்.

---

# தலைவர்கள் வாழ்த்துகிறார்கள்!

## இனத்தை வாழ்விக்க எழுக!

ஈழத் தமிழகத்தின் இளவள ஞாயிறு போன்று உதயஞ்செய்கின்ற ''உதய சூரியன்'' பத்திரிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில்பேருவகையடைகின்றேன். இன்றைய காலகட்டத்தில் இத்தகையதொரு பத்திரிகை தமிழினத்துக்கு மிக அவசியமும் அவசரமுமானது.

அரசியல் அந்தகாரத்தினால் நிச்சயமற்ற பொருளாதாரத்தில் மந்தாரமான சமுதாய வாழ்க்கை வாழும் மக்கள் விழித்தெழுந்து பிரகாசமான எதிர்காலத்தைக் சந்திக்க உதயசூரியன் உதிப்பதாக! அது; அரசியல் உணர்வு, கலையார்வம் என்றின்னோரன்ன துறைகளில் வாசகர்களை வழிநடத்திச் சென்று, உலகளாவிய எதிர்காலத்துட் பிரவேசிக்க வேண்டுமென்பது எனதுவிருப்பம்.

''உலகம் உவப்ப வலனேர்பு
திரிதரு
பலர் புகழ் ஞாயிறு''

என்று திருமுருகாற்றுப் படையிலே விபரிக்கப்படும் உதயசூரியனைப்போல, ஈழத் தமிழகத்தில் உதிக்கும் இவ்வுதய சூரியனும் உலகம் உவந்தேற்கவும், பலரும் புகழ்ந்தேத்தவும் தக்கதாகத்தானும் வாழ்ந்து தன் இனத்தையும் வாழ்விக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

பூ. கணேசலிங்கம்
பா.உ
பட்டிருப்பு.

## குறை நீங்குகிறது

அரசியல் ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் பொதுச்சொத்து. ஒவ்வொருவரது சிந்தனைக்கும் விளக்கத்துக்கும் ஏற்றவாறு அரசியல் பற்றி விமர்சிக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு உண்மை அரசியலை உணர்ந்து பேசுபவர்களும் உளர். உணர்ந்தும் உண்மைக்குப் புறம்பாக, தங்கள்தங்கள் நோக்கிற் கொப்ப அரசியல் கருத்துக்களை வேண்டுமென்று திரித்துக்கூறுபவர்களும்உளர். இது எமது நாட்டிற்கும் மாத்திரம் உரியதல்ல. ஜனநாயகம் ஆட்சி முறை நிலவுகின்ற நாடுகளில் எல்லாம் நாம் இதனைக் காண்கிறோம். கேட்கின்றோம்.

ஈழம் வாழ் தமிழ்ப்பேசும் மக்களின் ஒரே ஒரு அரசியல் இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இதுகாலவரை உண்மை அரசியல் கருத்துக்களை மக்கள் மத்தியில் சமர்ப்பிப்பதற்கு ஏற்ற ஒரு பத்திரிகை இல்லாதகுறையை இன்று வெளியாகும் 'உதய சூரியன்' நீக்குகின்றது.

நினைத்த நினைத்தபடியெல்லாம் அரசியலை— அரசியல் நிகழ்ச்சிகளை— தமிழர் விடுதலைக் கூட்டணியின் உண்மை அரசியல் போக்கை வேண்டுமென்று குறுகிய சில நோக்கங்களுக்காக பல தான்தோன்றிப் பத்திரிகைகள் மூலமாகவும் சில தின ஏடுகளின் மூலமாகவும் மக்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலையை உருவாக்கும் நோக்குடன் சிலர் முனைகின்றதை நாம் காண்கிறோம். குறித்த அரசியல் இருளை 'உதய சூரியன்' நீக்குமென்ற நம்பிக்கை எமக்குண்டு.

இன்று வெளியாகும் 'உதய சூரியன்' ஏடு வாசகர்களின் உற்சாகத்தினால் கூடிய விரைவில் தின ஏடாக மாறும்என்ற நம்பிக்கையுடன் உதயசூரியனை வாழ்த்துகின்றேன்.

—தா. சிவசிதம்பரம்
வவுனியா பா.உ.

## அடிமைக் குளிர் அகற்றுக!

பகை இருள் கடிந்து
புன்மைப் புகார் போக்கி
பொய்மைப்பனி காய்ந்து
அடிமைக் குளிர் அகற்றி
விடுதலைச் சூடேற்றி
உண்மை ஒளி பரப்பி
உதயசூரியன்
உலாவருகின்றான்
அகம்தோறும் மகிழ்வுடன்
வரவேற்குக!

- கா. பொ. இரத்தினம்
(பா.உ.)

# ஆட்சியாளரே! எங்களையுமா அழிக்கப்பார்க்கிறீர்கள்?

# முஸ்லிம் மக்களின் இதயக் குமுறல்!

இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் மக்களில் ஒரு பகுதியினரான முஸ்லிம் பெரும்மக்களுக்கும் இன்றைய ஆட்சியினரால் ஆபத்துக்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன.

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தைக் கீழே தருகிறோம்.

-ஆர்

'அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு' பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது—

''சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு நீதியும் நேர்மையும் இரு கண்கள். இந்த அரசு இந்த இரண்டையும் கண்ணெனப் போற்றுமாயின் அதைச் செயலில் காட்டி எங்கள் மனங்களைக் குளிரச் செய்யட்டும்'' என அறிக்கையில் காணப்படும் வரிகள் விவகாரத்தை மிகவும் ஊன்றிக் கவனிக்கச் செய்கின்றன.

★ கல்முனையிலிருந்த கல்வி அலுவலகத்தை தரம் குறைக்கும் வகையில் பரிபாலனத்திலிருந்து கீழிறக்கி ஒரு பிரதான கல்வி அலுவலரின் அலுவலகத்திற்குள் நுழைத்தது ஒன்று

★ பரிபாலன (நிர்வாகம்) மத்தியஇடமாகஅம்பாறையை அமைத்து கல்முனையை ஒதுக்கி விட்டிருப்பது மற்றொன்று,

இவ்விரண்டு விவகாரங்களும் கிழக்கிலங்கை வாழ் முஸ்லீம்களைப் பிரதானமாகவும் தமிழ் சமுதாயங்களைப் பொதுவாகவும் பாதிக்கக் கூடியவை

என அகில இலங்கைக் கல்வி மாநாடு அடித்துச் சொல்கிறது. நாட்டின் சகல முஸ்லீம்களும் இந்த நடவடிக்கைகளை ஒருமித்த குரலில் ஆட்சேபிக்க வேண்டியது கடமையென ''முஸ்லீம் டைம்ஸ்'' இதழும் உணருகிறது.

சகல இனமக்களிடமும் சமத்துவம் காட்டுவதாகசொல்லும் இந்த அரசு இப்படி நடக்கலாமா என்று ஒவ்வொருவரையும் கேட்க வைத்திருக்கிறது இவ்விரு நடவடிக்கைகளாலும் முஸ்லீம்களுக்குப் பாரபட்சம் நடந்துவிட்டதென்றே திட்டவட்டமாகச் சொல்லிக்காட்ட வேண்டியிருக்கிறது.

கல்முனை கல்வி அலுவலகம் ஒரு கல்விப்பணிப்பாளரின்கீழ் இருந்தது, இப்பொழுது இது தரம் குறைக்கப்பட்டு பிரதான கல்வி அலுவலகரின் காரியாலயமாகி, பணிபுரிந்து கொண்டிருந்த கல்விப் பணிப்பாளரும் (ஜனாப் எஸ்.எம்.எம்.எ. கபூர்) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இப்பெரும் மாற்றம்குறித்து கல்வி மாநாடு கல்வி அமைச்சருக்கு ஒரு எதிர்ப்புத் தந்தியும் 15,7.80ல் ஒருமகஜரும் அனுப்பியது. 7.8.78ல் கல்விமாநாடு அப்போதைய கல்வி அமைச்சரிடம் கோரிக்கை எழுப்பிய தன் விளைவாகவே ஒரு கல்விப் பணிப்பாளரை கல்முனையில் நியமித்துஅதன்பின் 12.6.79ல் கணக்காளர் ஒருவரையும் நியமித்தது.

இன்றோ அதன் அமைப்பு கழுதை தேய்ந்து கட்டெறும்பு நிலைக்கு வந்துள்ளமை முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் மிகவும் மனச் சஞ்சலத்தைத் தரக்கூடியது.

கல்முனையில் இயங்கி வந்த அலுவலகமானது, மூன்றுமுஸ்லீம தேர்தற் தொகுதிகளில் உள்ள 154 பாடசாலைகளின் (54,000 மாணவர்கள்) நலன்களையும் கவனிப்பதற்குஅமைக்கப்பட்ட ஒன்று.

ஒரு தொழில்நுட்பக்கல்லூரியும் ஆசிரிய கலாசாலை ஒன்றும் இந்த வட்டத்தில் இருக்கவும் செய்கின்றன.

ஆனல்—அம்பாறை அலுவலகத்திலிருப்பது ஒன்பதோ பத்தோ பாடசாலைகள் மட்டுமே.

''ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் ஒரேயொரு பணிப்பாளர் (டைரக்டர்) அலுவலகம்தான் இருக்க வேண்டுமென்பது அமைச்சின் திட்டமென வைத்துக் கொண்டாலும்கூட, அம்பாறை மாவட்டத்திலிருப்பது பெரும்பான்மை தமிழ் பேசும் முஸ்லீம்களைக்கொண்டமூன்று பாராளுமன்றத் தொகுதிகளும்அதற்கு எதிரா கஒரேயொரு சிங்களத் தொகுதி (அம்பாறை) மட்டுமே. அத்துடன்மாவட்டத்தின் தற்போதைய நிர்வாக நகரமான அம்பாறையானது மாவட்டத்தின் பெரும்பான்மை மக்களைவிட்டு தூர ஒதுங்கி தனியே உள்ளது''

இப்படி சுட்டும் அ.இ.மு.க. மாநாடு கல்முனையை நிர்வாக இடமாக—மத்திய நிலையமாக அங்கீகரிப்பதே எல்லாவிதத்திலும் நன்மையானது எனத் திட்டவட்டமாகக் குறிப்பிடுகின்றது.

அகிலஇலங்கைகல்விமாநாடு தனது ஆட்சேப அறிக்கையில் மேலும் குறிப்பிடுவதாவது:—

''உத்தேசிக்கப் பட்டுள்ள மாவட்ட அபிவிருத்தி சபைகளின் திட்டப்படி. அம்பாறையைஅம்பாறை மாவட்டத்தின் நிர்வாக இடமாகத் தொடர்ந்து இயங்கச் செய்வதில் என்ன நியாயமிருக்கின்றது என்று தெரியவில்லை.

அரசியல் சாசனப்படி வடகிழக்கு மாகாணங்களுக்கு தமிழ்தான் நிர்வாகமொழி. நிலமை இப்படியாயின், சிங்களத்தில் நிர்வாகம் செயல்படுத்தப்படும் அம்பாறையில் கச்சேரியை வைத்திருப்பது நியாயமா? இது கிழக்கு மாகாணத்தின் அம்பாறைப் பகுதியின் தமிழ்ப் பேசும்பெரும்பான்மையோரின் அடிப்படை உரிமைகளை மறுப்பது போலில்லையா? வடகிழக்கு மாகாணங்களிலுள்ள எல்லா மாவட்டக் கச்சேரிகளிலுமே அன்றாட அலுவல்கள் தமிழில்தான் நடைபெறுகின்றன. நிலை அப்படியிருக்கும்பொழுது அம்பாறை மாவட்ட மக்கள் மீது மட்டும் ஏன் இந்த பாரபட்சம்? அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பேசும் மக்களில் பெரும்பான்மையினோர் முஸ்லீம்கள் என்பதினலா இந்த ஓரவஞ்சனை?

அகில இலங்கை முஸ்லீம் லீக் கொழும்பில்நடத்தியபேரவை ஒன்றில்நிறைவேற்றிய தீர்மானமொன்றின்படிநில அமைப்பு மற்றும் காரணங்கள் குறித்து கல்முனைதான் அம்பாறை மாவட்டத்தின் நிர்வாக இடமாக இருக்க வேண்டுமென சுட்டியிருப்பது இங்குநினைவு கூரத்தக்கது.

''இத்தீர்மானம் 12.6.1977 அன்று மாவனல்லையில் நடைபெற்ற லீக்கின் கூட்டத்தில் ஐ.தே,க. தலைவரிடமே கையளிக்கப்பட்டது. இதே கூட்டத்தில்தான் நடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க. கட்சியை முஸ்லீம் லீக் ஆதரிப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

''இப்படியான பல சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டுமாண்புமிகு ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன நடு நிலைமை வகித்து நல்ல முடிவொன்றை எடுப்பாரென முஸ்லீம் சமுதாயம் எதிர்பார்க்கின்றது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களும் அம்பாறையைத் தொடர்ந்து நிர்வாக இடமாக வைத்திருக்கலாம். ஆனல் ஜனாதிபதி அவர்கள் கல்முனையை அம்பாறை மாவட்டத்தின்நிர்வாக இடமாகப் பிரகடனப் படுத்தி இப்பிரச்சினைக்கு நிலையான தீர்மானமொன்றைக் காண வேண்டும்.

''கல்முனையை அம்பாறை மாவட்டத்தின் நிர்வாக இடமாகப் பிரகடனப் படுத்துவதன் மூலம் இலங்கை முஸ்லீம்கள் அதிகமாக வாழும் ஒரேயொரு மாவட்டமான அதில் கல்வி சமூக, காணி அபிவிருத்தி மற்றும் ஏனைய பிரச்சினைகள் ஒரேயடியாகத் தீர்க்கப் பட்டுவிடுமென உறுதியாக நம்பலாம். முஸ்லீம் பாராளுமன்ற அங்கத்தவர்களும்தமிழ்சமுதாயத்தின் அங்கத்தவர்களும்இச் சிபாரிசை ஒருமுகமாக ஆதரிப்பார்கள் என்பது உறுதி.

—இவ்வாறு மாநாட்டினர் கோரியுள்ளனர்.

நன்றி: 'முஸ்லிம் டைம்ஸ்

## பழச்சாறு!

ஊறுந் தமிழ்க் கள்ளை
உண்ட தமிழ்ப் பிள்ளை
ஒன்று முதற் செய்வான்
ஓடிப்பகை கொய்வான்
சீறும் மத கரி
சேர்ந்தார் அதோகதி
சிந்தையிது கொள்ளு
செந்தமிழா துள்ளு

ஆண்டு பல நூறு
ஆண்ட இனம் கூறு;
ஆளுங் வருங்காலம்
அமையும் புதுக்கோலம்
மீண்டுந் தமிழ்க் குடி
மேவும் ஒரு படி
மேற்கும் இது கேட்கும்
மெல்லக் கரம் சேர்க்கும்!

முந்து தமிழ் மொழி
முகத்தின் இரு விழி
மூன்றும் பழச்சாறு
முழுதும் தமிழ்ச் சோறு
வந்து சுவை உண்ணு
வாரார் தலை எண்ணு
வைப்பாய் மனமிதை
வளர்ப்பாய் போரின் கதை!

வாகரை வாணன்

# அவையில் இல்லா அமைச்சர்!

புதிய அரசியல் அமைப்பில் உள்ள தமிழ் மொழி உரிமைகளை நடைமுறைப்படுத்தாமையால் அவை ஏட்டுச் சுரக்காய் ஆகிவிட்டன என்று காவலூர் பா.உ. திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் பாராளுமன்றத்திலும் வெளியிலும் கண்டனக்குரல்எழுப்பி வருகிறார். இது தொடர்பாக அவர் 5.9.80ல் பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புநேரத்தின்போது தமிழ் மொழிசட்ட நடைமுறைப் படுத்தலுக்கு பொறுப்பாக உள்ள அமைச்சர் திரு. செ. இராசதுரையை கேட்பதற்கு அறிவித்தல் கொடுத்திருந்தார். எனினும் அமைச்சர் அன்று வரவில்லை. எனவே திரு. கா.பொ. இரத்தினம் தமது பேச்சில் 'அமைச்சர் அன்றும் இச்சபையில்இருக்கவில்லை; இன்றும்இல்லை;அவர் என்று இருப்பாரோ தெரியவில்லை' என்று குறிப்பிட்டார். திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் அன்று நிகழ்த்திய பேச்சை கீழே தருகின்றோம்.

**இந்த அரசாங்க காலத்தில் எதுவும் நடவாது!**

''கௌரவசபாநாயகர்அவர்களே! நான் மூன்று நாளுக்கு முன்னர் இந்தக் கேள்வியை உங்களுக்குஅனுப்பியிருந்தேன் ஏனென்றால் இதுமிகவும் பிரதானமான ஒரு கேள்வி.தமிழ் மொழி உரிமையைப் பற்றிய கேள்வி இது. இதற்காக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரை நான் நேரே கேட்க வேண்டிய கேள்வியாக இது இருக்கிறது.

பிரதேச அபிவிருத்திஅமைச்சர் அவர்கள் தமிழ் மொழிஉரிமைகளை நடைமுறைப்படுத்த நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பது உங்களுக்குத்தெரியும்,பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவந்தன, நாடு அறியத் தக்கதாக் பிரசாரமும் செய்யப்பட்டது.

திணைக்களங்களும் கூட்டுத்தாபனங்களும் பிற அரசுகள் நிலையங்களும் தமிழ்மொழிச் சட்ட உரிமைகளை நடைமுறைபடுத்துவதற்குவேண்டியவழிப் படுத்துரைகள் மிகவிரைவில் வெளியிடப்படும் என்றும் அதற்குரிய அமைச்சரவை அனுமதிகிடைத்து விட்டது என்றும் இந்தச் சபையிலே சில வாரங்களுக்கு முன்னர் நான் கேட்ட கேள்வி யொன்றுக் குப்பதில்அளிக்கப்பட்டது. அந்த வழிப்படுத்துரைகள் எப்பொழுது வெளியிடப்படும் என்பதை இப்பொழுது அறிய விரும்புகிறோம்.

இந்த அரசாங்க காலத்தில் அவை வெளியிடப்படாமலும் போகலாம். அதைப் பற்றி அதற்குப்பொறுப்பானஅமைச்சர்களிடம் கேட்க நான் விரும்பினேன். ஆனால் அமைச்சர் அவர்கள் அன்றும் இச்சபையில் இருக்கவில்லை. இன்றும் இல்லை. அவர் என்று இருப்பாரோ? தெரியாது. பொறுப்



பான கேள்விகளைக் கேட்கும் போது அதற்குப்பொறுப்பான அமைச்சர் முதலாவது முறை வராது விடலாம். ஆனால் இரண்டாவது முறையும் அவர் வரவில்லை. எனவே அவரிடம் கேட்க வேண்டிய சில விடயங்களைக் கேட்கமுடியாமல் இருக்கிறது. இதைச் சபாநாயகர் அவர்களின் கவனத்திற்குநான் கொண்டுவருகிறேன். இருந்தாலும் அவருடைய பிரதி அமைச்சர் இங்கு இருக்கின்ற காரணத்தால் அவருக்குத் தெளிவை ஏற்படுத்துவதற்காக எனது கேள்வியை நான் ஆங்கிலத்தில் கேட்க விரும்புகிறேன்.

# பத்திரிகைப் 'பண்பாடு'

பத்திரிகைகளில் நான்கு சுவர்களுக்குள் நடக்கும் எல்லா விஷயங்களையும் எழுத முடியாது. நான் என் அறையில் நாலைந்து நண்பர்களுடன் பேசிக்கொண்டிக்கும் போது, கோபம் மேலீட்டால் சில தரக்குறைவான வார்த்தைகளைச் சொல்லிக் கூடத் திட்டிவிடுவேன். அதே வார்த்தைகளைப் பத்திரிகைகளில் எழுதிவிடமுடியாது, அறையில் திட்டும் வார்த்தைகளையே எழுத்தில்நாங்கள்எழுதாமல் இருந்ததினாலேயே நான் போலி வேஷம் போடுகின்றேன் என்று கூறிவிடவும் முடியாது. எதை எந்த இடத்தில் செய்கிறோம் என்ற உணர்வு ஒவ்வொருவருக்கும்வேண்டும்; அதுவும்பத்திரிகையாளருக்கு அதிகமாக வேண்டும்.

மக்களிடம் உயர்ந்த சிந்தனையையும் ஆழமான கருத்துக்களையும் கிரகிக்கும் மன வளத்தையும் உண்டாக்க வேண்டியது பத்திரிகைகளின் கடமை................. ஜனங்கள் எப்போதும் மயக்கமான ருசிகளில் ஆர்வம் உள்ளவர்கள் தான்; அவர்களைத் திருத்த வேண்டுமென்று ஆரம்பித்து விட்டால் பத்திரிகைகளுக்குத் தங்கள் தரத்தைத் தாழ்த்திக் கொண்டு போவதைத் தவிர வேறு வழியில்லை.

— துக்ளக் சோ

# கதவில்லாத் தமிழகம்

நடுவணரசினால்ஆந்திராவில் குடியேற்றப்பட்ட இலங்கைத் தமிழர்கள், அங்கு உள்ளூர் மக்கள் அவர்களுக்கு எவ்வித ஒத்துழைப்பும் தராததால் வாழமுடியாத நிலையில் தமிழகம் திரும்புகின்றனா.

இப்படி 150 குடும்பங்கள் அவர்களில் 50 குடும்பத்தினர் சீராளாவிலும் மற்றவர்கள் காக்கினடா போன்ற பகுதிகளில் குடியேற்றப்பட்டுஒரு ஆண்டாகியும் உள்ளூர் மக்களின் புறக்கணிப்புக் காரணமாக சென்னைக்குத் திரும்பி தங்களைத் தமிழ்நாட்டிலேயே குடியமர்த்துமாறு 'எழிலகம்' அலுவலகம் முன்பு சத்தியாக்கிரகம் செய்தனர்.

வந்தாரையெல்லாம் வாழவைக்கும் தமிழகத்தார் இது பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.இச்செய்தியைக்கூட எந்தத் தமிழ் ஏடும் வெளியிடவில்லை. 'இந்து' ஏடு மட்டும் தான் அரைகுறையாக ஒரு மூலையில் வேண்டா விருப்பாகப் பிரசுரித்திருந்தது. ஆனால் இனவுணர்வு என்னவோ மேடைகளில் மட்டும் மாலை நேரங்களில் முழக்கப்படுகின்றது.

அந்தோ தமிழகமே! உனக்கு மட்டுந்தான் கதவோபூட்டோ கிடையாதுபோலும்.

—தகவல்- மர்மம்

## செய்தி நிருபர்கள் தேவை!

தொகுதிக்கிளைத் தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பிக்கவும்.

ஆசிரியர்
**'உதய சூரியன்'**
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# உங்களுக்குத் தெரியுமா?

'தினபதி'யை வெளியிடும் சுயா தீனப்பத்திரிகை சமாஜம், சிங்களப் பத்திரிகைகளையும் ஆங்கில—தமிழ்ப் பத்திரிகைகளையும்வெளியிடுகின்றது.

இந்தப் பத்திரிகைளில்— 'தவச' போன்ற சிங்களப்பத்திரிகைகள், அபிவிருத்திச் சபைகள் சிங்கள இனத்தைச் சிதைத்துவிடும்— எதிர் காலச் சந்ததிகளையும் பாதிக்கும் - நாட்டைப்பிரிக்க வழிவகுக்கும்— தமிழ்ப் பகுதிகளிலே சிங்களவர் குடியேற முடியாமற் செய்துவிடும் என்பன போன்ற பல கருத்துக்களைச் சிங்கள மக்களிடையே தீவிரமாகப் பரப்புகின்றன.

'தினபதி'யோ அபிவிருத்திச் சபைகள் தமிழினத்தின் போராட்டத்தை தமிழ்ஈழக் கோரிக்கையைச் சிதைத்துவிடும் தமிழரை மீளா அடிமைகளாக்கிவிடும்என்று தமிழரிடையே தீவிரபிரசாரஞ் செய்கின்றது.

'சண்' எனும் ஆங்கிலப் பத்திரிகை அபிவிருத்திச் சபைகளைத் தமிழர் ஏற்பது நல்லது. இச்சபைகளால் ஆட்சியாளர் அதிகாரத்தைப் பரவலாக்க முயல்கின்றனர்......... என்று சமாதானம் செய்கின்றது.

இந்த மூன்று பத்திரிகைகளின் மாறுபாட்டுக்கும் வேறுபாட்டுக்குமான முக்கிய காரணம் என்ன வென்றுதெரியுமா உங்களுக்கு? பத்திரிகை வியாபாரம்!

# அமைச்சருக்கும் ஆவேசம் வருகின்றது!

முஸ்லிம்களாகிய நாம் எவரிடமும் சலுகைகளைக் கேட்கவில்லை. சலுகைகள் எமக்கு வேண்டாம். உரிமைகளேதேவைஇந்நாட்டில் வாழ்கின்ற ஏனைய இன மக்களைப் போல சரிசமமாக உரிமை பெற்று நாம் இந்நாட்டில் வாழவேண்டும்.

இவ்வாறு, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின்போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மது அவர்கள் 6-9-80ல் கம்பளை சாஹிரா கல்லூரியில் நடைபெற்ற ஹீஜ்ரா விழாவின் உச்சக் கட்ட வைபவத்தின் போது கூறினர்.

# மலையகத் தமிழரின் மனம் நிறைந்த வாழ்த்து!

தமிழ் இனம் தலைநிமிர அஞ்சாது, துஞ்சாது போராடி வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உத்தியோகப் பூர்வ ஏடாக உதித்திருக்கும் உதய சூரியனை மலையக மக்களின் சார்பில் வரவேற்கிறோம். வாழ்த்துகிறோம்.

உதயசூரியன் தினசரியாக உதிக்கவும் அதன் மூலம் தமிழர் வாழ்வுஒளிபெறவும் ஆவன செய்வோம். அதற்கு எமது ஒத்துழைப்பு என்றும் உண்டு.

ஜீ. எல். டி. கோவிந்தராசன்
இலங்கைத்தொழிலாளர் கழகம்.

எழுத்தாளர்களே
எழுதுங்களேன் -
**'உதயசூரியன்'**
ஒளி
உங்கள்
ஆக்கங்களையும்
தழுவ வேண்டாமா?

உதயசூரியன் உதயம் கண்டு
ஓடி மறைகின்றது மேகம்
இதயம் துடித் தெழும் இளைஞர் வாழ்வில்
எழுந்ததோர் புதியதோர் வேகம்

வாழ்த்துகிறோம்

**வசந்தா ஸ்ரோர்ஸ்**

**59, பிரதான வீதி, ஊர்காவற்றுறை.**

சுத்தமான பசும்பால் — சுவையூட்டும்
பானங்கள் — சைவ உணவு — சகலவித
சிற்றுண்டி வகைகள் எப்பொழுதும்
பெற்றுக்கொள்ளலாம்.
திருமண வீடு— சிறப்புமிகு கொண்டாட்டங்களுக்குரிய
ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

**கிருஷ்ண பவான்**

**37, காங்கேசன் வீதி, யாழ்ப்பாணம்.**

இன, மொழி உணர்ச்சியின் சின்னம்
தினம் உதிக்கும் உதய சூரியன்
திசைநோக்கித் தொழுவோம்!

**பரணி மருந்துச் சாலை**

**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

சுதந்திரத் தேரேறிவரும்
சுடரொளியே!
வருக நீ! வணங்குகின்றோம்!

**சி. அருளம்பலம்**

புளியங் கூடல் சந்தி,
புளியங் கூடல்

ஏக விநியோகத்தர்:-
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
சீமெந்து கூட்டுத்தாபனம்
சீனி கூட்டுத்தாபனம்.

கிளை:-

**திருக்குமரன் ஏஜன்சி**

**167, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.**

வாருங்கள்! வாருங்கள்!

எங்களிடம் எல்லா விதமான
போறை— கிருமி நாசினி வகைகளும்
அரிசி பலசரக்குப் பொருட்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**அ. ச. ஆறுமுகம் அன் சன்ஸ்**

**பிரதான வீதி, ஊர்காவற்றுறை:**

பத்திரிகை உலகத்திற்கு மெருகூட்ட
உரிமைப் போராட்ட இயக்கங்களுக்கு
ஒளி ஊட்ட
உதயமாகும் 'உதய சூரியனை'
வாழ்த்தி வரவேற்கிறோம்!

இலங்கை இந்திய சஞ்சிகைகளுடன் மாணவ மாணவிகளின் பாடசாலைஉபகரணங்கள் அனைத்தும் எங்களிடம் கிடைக்கும்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

**4, ஏ. பேருந்து நிலைய முகப்பு யாழ்ப்பாணம்.**

# புரட்சிப்பூ மலரட்டும்!

—மாவை சேனாதிராசா

இற்றை வரை இயக்கத்தின் ஏடு என்று ஒன்றில்லாமையால் இயக்கத்தின் உண்மைக்கருத்துக்களை இலட்சிய விளக்கங்களை எடுத்துச்சொல்ல முடியாமலிருந்து வந்திருக்கிறது.

இனிமேல் உதயசூரியன் தமிழிதயங்களில் விடுதலைத் தீயை மூட்டுவான்— சுதந்திரதாகத்தை ஏற்றிடுவான்— தமிழீழத் தாயகத்தின் விடுதலைக்குத்தமிழர்சமுதாயத்திற்குவழிகாட்டி அழைத்துச் செல்லும் சுடரொளியாய் எல்லோர் இதய வீட்டிலும் விளங்கிடுவான் என்று நம்புகிறோம்.

ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளைஒக்கும் என்பது போலப் பேச்சாளனின் நாவும், எழுத்தாளனின் எழுதுகோலும் இயக்கத்தின் படைக்கலன்களாகும் என்பது உண்மைதான்.

அசையும்நாவுக்கும் எழுதுங்கோலுக்கும் எழுச்சிகொள்ள வைக்கும் சக்தி இருப்பது போல ஆக்கம் விளைக்கும் ஆற்றலும் உண்டுதான்-ஆனால் அடக்கம் இல்லாதுவிட்டால்..

எழுத்துச் சுதந்திரம் எனும் பெயரால் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களையும் பொய்யையும் புனைந்துரைகளையும் எழுதுகோலின்மையாக்கி விட்டால்.

தூய்மையும்நேர்மையும் சத்தியமும் அந்தஎழுத்துக்களிலே இல்லாது விட்டால்... அது எழுத்துச் சுதந்திரத்தைக் கறைபடியச் செய்துவிடும்— இலட்சியத்தை இயக்கத்தை மட்டுமல்ல அதற்குரிய சமுதாயத்தையே சீரழித்துவிடும்.

பொதுமை உணர்வுடன் இலட்சியநோக்குடன், தியாகச் சிந்தையுடன் எழுதும் கோல் என்றும்ஆக்கத்தையும் வெற்றியையுந்தரும் செங்கோலாய் ஆட்சிசெய்யும். அணுக்குண்டைக் கண்டு பிடிப்பதிலும் அதனை ஆக்கத்திற்குப் பயன்படுத்துவதிலேதான் அதன் வெற்றியே தங்கியிருக்கிற போலவே எழுதுகோலும் பயன்பட வேண்டும்

இன்று எம்மத்தியிலே நடப்பது சத்தியசோதனை. பொய்மைசிலநாள் வெல்லும், உண்மை இறுதியில் என்றும் வெல்லும் வலிமைகொண்டது.

தமிழினத்தில் குறிப்பாகத் தமிழ் இளைஞர் சமுதாயத்திடம் தமிழ் உணர்ச்சியுடன் சுதந்திர எழுச்சியையும் வேகத்துடன்விவேகத்தையும்; அறிவுடன் ஆற்றலையும்; தன் மானத்துடன் தன்நம்பிக்கையையும்; வீரத்துடன் வெற்றியையும் உருவாக்கிடவும்;

தமிழர் சமுதாயத்தை எத்தகையதொரு தியாகத்திற்கும் அர்ப்பணித்திடவும் எருவாக்கிடவும்,

தமிழீழத் தேசிய இனத்தின் விடுதலை உலகத்தமிழினத்தின் விடுதலையாக, சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிக்குப் பூத்திட்ட சமதர்மப் பூங்காவாகத் தமிழீழத்தை நிறுவிடச் செவ்வானத்தில் உதிக்கட்டும் உதயசூரியன் என்று வாழ்த்துவோம். வரவேற்போம்.

## விடுதலைக் குரலே..

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல உள்ளங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

நமது விடுதலை உணர்வை— நமது பிரச்சினையை உலகின் கவனத்துக்குக் கொண்டுவருவதில் இருள்படிந்த காலத்தை மாற்றி விடிவு ஏற்படுத்துவதில் உதயசூரியன் தன்பங்கை அளிக்கும் என நம்புகின்றேன்.

எனது வாழ்த்தை இவ்வேளை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

—மு. சிவசிதம்பரம்

## பகலவன் வந்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்கின்றனர், இந்த நேரத்தில் பகைபபனியைப் பறந்தோடச் செய்ய 'உதய சூரியன்' வெளிவருகிறான். பனித்திரை எவ்வளவு கனமாகஇருந்தாலும் பகலவன் முன் நிற்க முடியாதென்பது உறுதி. தமிழ் மக்கள் அறிவுக்கண்களை மறைக்கும் திரையினால் விபத்துகளுக்கு ஆளாகாது சரியான பாதையைத் தொடர்ந்து சுதந்திர சோசலிசத் தமிழ் ஈழம் என்ற இலக்கைச்சென்றடைய 'உதய சூரியனின்' அறிவுக் கதிர்கள் ஒளியை வழங்குமென்று நம்புகிறேன். தமிழ் இனத்தின் ஒற்றுமை கட்டுப்பாடு விடுதலை ஆகியவற்றில் நம்பிக்கைகொண்ட தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஆதரவு வழங்குமாறு வேண்டுகிறேன்.

அ. அமிர்தலிங்கம்
செயலாளர் நாயகம்
தமிழர் விடுதலைக் கூட்டணி

'உதய சூரியன்'

அடுத்த இதழ்

10-10-80ல் வெளிவரும்

இதைத் தொடர்ந்து

ஒவ்வொரு

வெள்ளிக்கிழமையும்

உதயமாகும்.

**நீங்கள் மில்க்வைற் தயாரிப்புக்குத் தரும் ஆதரவின் பயன்**

— வசதி, வாய்ப்பு, பயன் கருதி மரங்களை நடுதல்.
— வீட்டுத்தோட்டம் விருத்தி செய்தல்.
— பசு வளம் பெருக்கிப் பயன்பல பெறுதல்.
— பாலைதரும் செடிகள் மரங்களை உண்டாக்குதல்
— ஊர்கள்தோறும் குளங்களை ஆளமாக்கி மழை நீரைத் தேக்குதல்.

— சனசமூக நிலையங்களில் வாசிக்க வழி செய்தல்.
— பக்தி நெறியில் பரமனைப் பணிந்து வாழப் பயிற்றுதல்.
— எல்லோரும் எல்லோருக்கும் சேவை செய்தல்.
— வள்ளுவர் நெறியில் வையகம் வாழ வழி வகுத்தல்.
— எல்லோரும் யோகாசனம் பயில வைத்தல்.

மில்க்வைற் மேலுறைகளைச் சேகரித்து பெறுமதிவாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற்சவர்க்காரத்தொழிலகம்**

**த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.**

**திருமுருகன்**

உதய சூரியனே வருக! வருக!

உதய சூரியன் வெளியீட்டகத்தால் நல்லூர் சண்முகா பதிப்பகத்தில் 28-9-80 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.